# புதுச்சேரி அரசு
# அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் துறை
# புதுச்சேரி மாசுகட்டுப்பாட்டு குழுமம்

புதுச்சேரி, தேதி 08.02.2019

**பொது அறிவிப்பு**

நெகிழி தூக்குப்பைகள், ஒருமுறை பயன்படுத்தப்படும் குவளைகள் மற்றும் தட்டுகள் ஆகியன புதுச்சேரி ஒன்றியத்து ஆட்சிப்பரப்பில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன;

நெகிழி தூக்குப்பைகள், ஒருமுறை பயன்படுத்தப்படும் நெகிழி குவளைகள் மற்றும் தட்டுகள், குடிநீர் பைகள், நெகிழி விரிப்பான்கள் ஆகியன மக்காத தன்மை கொண்டன என்பதால், இவைகள் கழிவுநீர் கால்வாய் மற்றும் சாக்கடைகளிலும் அடைத்து கொண்டு காற்று, நீர் மற்றும் நிலத்தை மாசுபடுத்துகின்றன. நெகிழி பைகளில் உணவுப்பொருட்கள் விநியோகிக்கப்படுவதால் பொதுமக்களுக்கு சுகாதாரக் கேட்டினை ஏற்படுத்துகிறது;

இந்த ஒன்றிய ஆட்சிப்பரப்பில் நெகிழி தூக்குப்பைகள், ஒருமுறை பயன்படுத்தப்படும் குவளைகள் மற்றும் தட்டுகளை பயன்படுத்துவது கழிவு மேலாண்மையில் மிகப்பெரிய சவாலாக இருக்கிறது. இவை மக்கும் கழிவுகளை உரமாக்கும்போது தடையாக உள்ளது.

இந்திய அரசாங்கம், நெகிழி கழிவு மேலாண்மை விதி 2016-ல் வெளியிட்டுள்ள அறிவிக்கையின் படி, 50 மைக்ரான் தடிமனுக்கு குறைவாக உள்ள நெகிழி தூக்குப்பைகள், நெகிழி தாள்கள், குவளைகள் மற்றும் உறைகள் ஆகியவை தயாரிக்க, இறக்குமதி செய்ய, இருப்பு வைக்க, விநியோகம் மற்றும் விற்பனை செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

50 மைக்ரான் தடிமனுக்கு குறைவாக உள்ள நெகிழி தூக்குப்பைகள், நெகிழி குவளைகள் மற்றும் தட்டுகளை பயன்படுத்த, விற்பனை செய்ய மற்றும் இருப்பு வைக்க புதுச்சேரி அரசாங்கம் G.O. Ms.No.9/2009/Envt/209 தேதி 09.12.2009 அன்று அரசாணை பிறப்பித்து தடை செய்துள்ளது.

மேற்கூறிய அறிவிப்பின்படி, ஒருமுறை பயன்பாட்டில் உள்ள நெகிழி பைகள், மற்றும் நெகிழி குவளைகளை முழுமையாக தவிர்க்க இயலவில்லை என்று அரசின் பார்வைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்பு சட்டம் 48-அ-ன் படி, சுற்றுச்சூழலை பாதுகாத்து மேம்படுத்த மாநில அரசு முயற்சி எடுக்க வேண்டும்.

இந்திய அரசியலமைப்பு சட்டம் 51-அ (ப), விதியானது இயற்கையான சுற்றுச்சூழலை பாதுகாப்பது ஒவ்வொரு இந்திய குடிமகனின் கடமை என்று வலியுறுத்துகிறது.

சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986, பிரிவு 5, மற்றும் சுற்றுச்சூழல் விதி 1986, பிரிவு-4 (3a)-ல் வழங்கப்பட்ட அதிகாரங்களைக் கையாளுவதில் மத்திய உள்துறை அமைச்சகத்தின் 10.09.1992 தேதியிட்ட அறிவிப்பு எண் S.O. 667 (E), படி பின்வரும் கட்டளைகளை வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

01.03.2019 முதல் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் ஒருமுறை பயன்படுத்தப்படும் பின்வரும் நெகிழி பொருட்களை தயாரிக்கவோ, வழங்கவோ, விற்பனை செய்யவோ, இருப்பு வைக்கவோ, விநியோகிக்கவோ, பயன்படுத்தவோ மற்றும் எடுத்துசெல்லவோ கூடாது:

1. உணவுப் பொருட்களை எடுத்து செல்ல உபயோகிக்கும் நெகிழித்தாள் / ஒட்டும் தாள்
2. உணவு அருந்தும் மேஜையின் மீது விரிக்கப்படும் நெகிழி தாள்.
3. நெகிழியாலான தெர்மக்கோல் தட்டுகள்
4. நெகிழி பூசப்பட்ட காகித தட்டுகள்
5. நெகிழி பூசப்பட்ட காகித குவளைகள்
6. நெகிழி தேனீர் குவளைகள்
7. நெகிழி குவளைகள்
8. தெர்மக்கோல் குவளைகள்
9. நீர் நிரப்ப பயன்படும் பைகள் / பொட்டலங்கள்
10. நெகிழியாலான உறிஞ்சு குழல்கள்
11. நெகிழிப்பைகள் (எந்த அளவிலும், எந்த தடிமனாக இருப்பினும்)
12. நெகிழி பூசப்பட் பைகள்
13. நெகிழிக்கொடிகள்
14. நெய்யாத நெகிழிப்பைகள்.

இருப்பினும், பின்வரும் நோக்கங்களுக்காக உபயோகப்படுத்தப்படும் நெகிழி பொருட்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(அ) ஏற்றுமதிக்காக மட்டும் தயாரிக்கப்படும் நெகிழி தூக்குப்பைகள்

(ஆ) உற்பத்தியான பொருட்களை உபயோகப்படுத்துவதற்கு முன்பாக உள்ளே அடைத்து முத்திரையிட்ட நெகிழி பைகள்.

(இ) வனவியல் மற்றும் தோட்டக்கலைகளில் பயன்படுத்தப்படும் நெகிழி பைகள்.

(ஈ) பால் மற்றும் பால் பொருட்கள், எண்ணெய், மருந்துகள், மருத்துவ உபகரணங்களை அடைக்க பயன்படும் நெகிழி பைகள்.

(உ) இந்திய தரநிலை IS or ISO 17088:2008 உறுதிப்படுத்தக்கூடிய "மக்கும் நெகிழி"யின் குறிப்புகளை கொண்ட, நெகிழி தூக்குப்பைகள்.

**விளக்கம் 1:** "நெகிழி என்பது, பாலிமர், பாலியெத்திலின் டெரிப்ப்ஃதலேட், உயர்ந்த அடர்த்தியான பாலியெத்திலின், வினைல், குறைந்த அடர்த்தியான பாலியெத்திலின் பாலிப்ரோப்பிலேன், பாலிஸ்டரைரின், ரெசின்ஸ், பல்நோக்கு பொருட்களான அக்ரிலொனைட்ரில் பியூட்டாடைன் ஸ்ட்ரைரின், பாலிஃபெனிலின் ஆக்ஸைடு, பாலிகார்போனேட் மற்றும் பாலிப்யுட்லீன் டெரிப்ப்ஃதலேட் போன்றவைகளை மூலப்பொருட்களாக கொண்டவைகள்.

**விளக்கம் 2:** "ஒருமுறை பயன்படுத்தப்படும் நெகிழி" என்பது, நெகிழி தூக்குபைகள் பொருட்களை உள்ளே வைத்து சுத்தும் நெகிழி தாள்கள், உணவருந்தும் மேசை மற்றும் தட்டுகளுக்காக பயன்படுத்தும் நெகிழி தாள்கள், நெகிழி பூசிய தேநீர் கோப்பைகள், குவளைகள், தண்ணீர் பைகள், பாக்கெட்டுகள் நெகிழி உறிஞ்சிகள், மற்றும் நெகிழி கொடிகள், இவைகள் எந்தவிதமான தடிமன் இருந்தாலும்.

**விளக்கம் 3:** "நெகிழி தாள்" என்பது, ஒருமுறை உபயோகப்படுத்தி தூக்கி எறியப்படும் நெகிழியால் ஆனது.

**விளக்கம் 4:** "தூக்கு பை" என்பது, நெகிழி பொருள்களால் ஆன, பொருட்களை எடுத்து செல்வதற்கான அல்லது விநியோகிப்பதற்கான, அம்சம் கொண்டவைகள். பொருட்களை உபயோகப்படுத்துவதற்கு முன்பாக உள்ளே அடைத்து முத்திரையிடப்பட்ட நெகிழி பைகள் இதில் பொருந்தாது.

**விளக்கம் 5:** "உரமாகும் நெகிழி" என்பது இயற்கையாக மக்கும் தன்மை கொண்டு, தீமை விளைவிக்கக் கூடிய இரசாயன எச்சஙகளை உறுவாக்காதவை.

இந்த கட்டளைகளை, கீழ்கண்ட அதிகாரிகள் தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட ஆட்சிப்பரப்பில் நடைமுறைப்படுத்த நியமிக்கப்பட்டுள்ளனர்:

(i) உறுப்பினர் செயலர், புதுச்சேரி மாசுகட்டுப்பாட்டு குழுமம்

(ii) ஆணையர், நகராட்சி / கொம்யூன் பஞ்சாயத்து

(iii) வட்டாட்சியர், வருவாய் மற்றும் பேரிடர் துறை

(iv) உணவு ஆய்வாளர், உணவு பாதுகாப்பு துறை

(v) வருவாய் அலுவலர்கள், நகராட்சி

இந்த அறிவிப்பை உறுப்பினர் செயலர், புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமம் அவர்கள் ஒருங்கிணைப்பாளராக இருந்து செயல்படுத்துவார். தலைவர் மற்றும் உறுப்பினர் செயலர், புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழுமம், அவர்கள், வழக்கு தொடர சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதி, 1986, பிரிவு 19-ன் படி 16.04.1987 தேதியிட்ட அறிவிப்பு எண் 50 394 (E) மேலும் 03.09.1996 தேதியிட்ட திருத்ததப்பட்ட அறிவிப்பு எண் S.O. 624 (E) மூலம் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளார்கள்.

பொதுமக்கள், மேற்கூறிய அறிவிப்பு மீதான, தங்களது கருத்துக்ள் / ஆட்சேபனைகள் / பரிந்துரைகள் ஆகியவற்றை 15 நாட்களுக்குள், செயலர் (சுற்றுச்சூழல்) புதுச்சேரி, தலைமைச்செயலகம், புதுச்சேரி-605 001 என்ற முகவரிக்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ப. பார்த்திபன், I.A.S)
அரசு செயலர் (சுற்றுச்சூழல்)